T. 501.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சித்தாந்தம்.

சைவசித்தாந்த சமாஜத்தின் மாதாந்தரத்
தமிழ்ப் பத்திரிகை.

ORIENTAL MANUSCRIP

நான்காவது தொகுதி

பத்திராசிரியர்
சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்
சிவஸ்ரீ-கலியாணசுந்தரயதீந்திரர்
(மணவழகு.)

சென்னை,
மஹா லக்ஷ்மி விலாச அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.
1915

# சித்தாந்தம் நான்காவது தொகுதியின் உள்ளுறை.


அதுவதுவாதல், S. பால்வண்ண முதலியார். ... ... 277

அருளுடைமை. கி-குப்புச்சாமி (களந்தைகிழான்)... ... 115

அவிரோதவுந்தியார் விசாரம். வைதிகசைவ சித்தாந்த சண்டமாருதம் ... 261, 284

ஆலயவழிபாடு. தி-அரங்கசாமி நாயுடு ... ... 210, 247

உன்னையறி உன்முடிவினை சிந்தைசெய் வா-தி-கோவிந்தராஜ முதலியார் ... ... ... 37

ஒரு உபநிடதமந்திரம். J. M. நல்லசாமி பிள்ளை B. A; B. L. 209

ஒழுக்கம். நாகை S. மெய்கண்ட முதலியார்... ... ... 58

கடவுள் வணக்கம். இ. இ. சஞ்சிகை ... ... 145

கடவுளும் சமயமுமும். வியாசத்திரட்டு 182

கடோப நிஷத்து. மணவழகு (ப-ர்.) ...1, 27, 51, 75, 99, 123

சங்கங்களின்பயன். பொ-மாணிக்கஞ் செட்டியார் 163, 188

சத்தியம்பேணல். ஞானகாசம் ... ... .... 102

சரியையாதிகளின் சொரூபம். குளித்தலை-அரங்கசாமி ஐயர் 71

ஜாபாலோப நிஷத்து. மணவழகு (ப-ர்,) ... ... 171

சிவத்தியானம். வியாசத்திரட்டு ... ... ... ... 233

சிவோபாசனமகிமை. S. நடேச தேசிகர் ... 9, 88 , 119, 179

சிவபிரான்கருணையும் சீவர்கள் கடமையும் மு-கதிரேசஞ் செட்டியார் 130,150,176,199, 222

செம்பொருள். வ-மு-இரத்தினேசுவரையர் ... ... — 191

சைவசித்தாந்த சமாஜத்தின் ஒன்பதாவது வருடக்கூட்டம் களந்தைகிழான் 17

சைவசித்தாந்த மகாசமாஜ நிர்வாக சபையார் ஷை 24

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1914௵ டிசம்பர்௴ வரவு செலவு கணக்கு A. சோமசுந்தரம் பிள்ளை 26

தமிழில்வடமொழிகலத்தல். மாகறல்-கார்த்திகேய முதலியார் ... ... 95,111,127

தாயுமானவர் கொள்கை. பொ-முத்தையா பிள்ளை 44, 55

தாரகமந்திரம். மணவழகு (ப-ர்.) ... ... ... 147

திரிபதார்த்த தசகாரியம். J. M. நல்லசாமி பிள்ளை B. A; B. L. 155

துறவு. வியாசத்திரட்டு ... ... ... ... ... 287

தைப்பூசமகிமை. யாழ்ப்பாணம்-கனகசபாபதி ஐயர் ... 166

நால்வர் முத்தி. S. பால்வண்ண முதலியார் ... ... 251

நான்யார் ஷை ... .... ... ... 13, 33

பக்தி. கி-குப்புச்சாமி (களந்தைகிழான்) ... ... 229

பட்டினத்தடிகள் அருணகிரியார்க்குத் தந்தையாவரா? } சே-ரா திம்மப்பையர் 272

பிரமகீட நியாயம். ப-ர-ஜீ .. ... ... 194

புண்ணியம். ஓர்சைவன் ... ... ... ... 290

முத்தமிழ்ச் செல்வராகிய மாணிக்கவாசகர் காலவாராய்ச்சி
காஞ்சிபுரம். திரு-சுப்பிரமணிய தேசிகர் 60

மூடபக்தி. யாழ்ப்பாணம் S. சபாரத்தின முதலியார் ... 139

மெய்யுணர்வு கி-குப்புச்சாமி (களந்தைகிழான்) ... 215

மைத்திராயணீயோபநிஷத்து மணவழகு (ப-ர்.) 195, 219, 243, 267

விசுவாசம் யாழ்ப்பாணம் S. சபாரத்தின முதலியார் 76, 91, 107

விசுவாசம். இந்துசாதனம் ... ... ... ... 122

விவேகரத்தின மாலிகை ஷை ... ... ... 135

விருந்தோம்பல். பொன்மார்-நடேச முதலியார் ... ... 78

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தொகுதி ச.] 1915ஆ ஜனவரிமீ, [பகுதி க.

யஜுர்வேத

# கடோபநிஷத்து.

அத்தியாயம்-க-வல்லி-க-மந்திரம்-க.

வாஜசிரவசன் * (விசுவஜித் என்னும் யாகபலத்தை) இச்சித்தவனாய்ச் சகலதனத்தையும் (ரித்விக்குகளுக்குக்) கொடுத்தான். அவனுக்கு நசிகேதன் எனப்பெயருள்ள புத்திரனொருவ னிருந்தான்.

உ. தட்சணைகளாகப் (பசுக்களைப்) பிரித்துக் கொடுக்கையில் வாலிபனாகவிருக்கிற அந்த நசிகேதனுக்கு ஆஸ்திக்புத்தி † பிரவேசித்தது, அவன் (பின்வருமாறு) நினைத்தான்.

---

*வாஜமெனில் அன்னம், சிரவாயெனில் கீர்த்தி. எவனுக்கு அன்னதானத்தால் கீர்த்தியுண்டாகிறதோ அவன் வாஜசிரவசன்.

†ஆஸ்திக புத்தியாவது தமது பிதாவினுக்கு நன்மை யுண்டாகவேண்டுமெனும் புத்தி.

௩. ஜலபானம் செய்யவும், புல்லைக்கடிக்கவும், பாலைக்கறக்கவும், கர்ப்பந்தரிக்கவும் சக்தியற்ற (எப்பசுக்களோ) அவைகளை (எவன் தட்சணையாகக்) கொடுக்கிறானோ அவன் சுகத்தைக்கொடுக்காத உலகங்களாகிய அவைகளை யடைகிறான். .

௪. (தந்தையால் கொடுக்கப்படும் தட்சணை தகுதியானவையல்லவென நினைத்துத் தந்தையைநோக்கி நசிகேதசு) பிதாவே! எவன் பொருட்டு என்னைத் (தட்சணையாகக்) கொடுக்கப்போகிறீர் என்று தகப்பனாரை மூன்றுதரம் கேட்டான். (தந்தை கோபங்கொண்டு) உன்னை யமனுக்குக் கொடுக்கிறேனென்று அவனுக்குச் சொன்னான்.

௫. (யமனுடைய சீடர்கள்) அனேகருக்குள் (நான்) முக்கியனாவேன் (அல்லது) மத்தியனாவேன். (பாலியனாகிய) என்னால் எமன் எதைச் செய்துகொள்ளப்போகிறான். (என்னால்) எமனுக்குச் செய்யவேண்டிய தென்னவிருக்கிறது (எனநினைத்தான்.)

௬. (கோபத்தாற் சொல்லிவிட்ட பிதாவை நசிகேதசுநோக்கி) முன்னோர்கள் எப்படி நடந்தார்களோ? ஆலோசித்துப்பாரும். இப்போதிருக்கிற சாதுக்கள் எப்படி நடந்துகொள்ளுகிறார்களோ? அதையும்ஆலோசியும், மனிதன்பயிர்போல மரணமடைகிறான், மறுபடியும் பயிர்போலப் பிறக்கிறான் என்றான்*

௭. (தந்தையின் கட்டளையின்படி நசிகேதசு எமன் வீட்டிற்குப்போக எமன்மனைவி சொல்லுகிறாள்) பிராமணன் அக்கினிபோல அதிதியாக வீட்டிற் பிரவேசிக்கிறான். யமனே! அக்கினுக்கு இந்தச் சாந்தியைச் சாதுக்கள் செய்கிறார்கள். ஆகையால் நசிகேதசின் காலலம்பவேண்டி) ஜலத்தைக் கொண்டுவாரும்.†

---

*தமது தந்தை தன்னை எமனுக்குக் கொடுப்பதாகச் சொல்லிய வார்த்தையில் தவறாதிருக்கும்படி இங்ஙனம் சொல்லினன்.

†நசிகேதசு யமலோகம்போக, அக்காலத்தில் யமன் வீட்டிலில்லாதிருந்ததனால்தனித்திருந்த அவன் மனைவியின் அதிதிபூஜையைக்கிரகிக்காது மூன்று நாள் பட்டினியாக விருந்தான், எமன்வந்தபின் அவன்மனைவி இங்ஙனம் சொல்லினள்.

அ. (எமன் தெரிந்துகொண்டு) அற்பபுத்தியுள்ள எந்தப் புருஷனுடைய வீட்டில் பிராமணன் போஜனம் செய்யாமல் வாசம் செய்கிறானோ (அவ்வீட்டை யுடையவனுக்கு) இச்சை சங்கற்பங்கள், சாதுக்களின் சேர்க்கை, பிரியமான வார்த்தை, யாக முதலிய கர்மம், நல்ல காரியம், பிள்ளைகள், பசுக்கள் இவைகளையெல்லாம் (அப்பிராமணன்) நீக்கிவிடுவான்.

கூ நமஸ்காரத்திற்கு யோக்கியனான ஓ நசிகேதசே! எந்தக்காரணத்தால் என்னுடையவீட்டில் அதிதியாகமூன்று இராத்திரி சாப்பிடாமல் வசித்தாயோ? அதனால் உனக்கு நமஸ்காரம் இருக்கட்டும். தோஷத்தினின்றும் (விடுபட்டுச்) சுபமெனக்குண்டாகட்டும்.

கO. ஓ யமனே! கௌதம கோத்திரத்தில் வந்த என்தகப்பன், என்னைக்குறித்துச் சாந்தியுடையவராயும், தெளிவான மனமுடையவராயும், கோபமற்றவராயும் எப்படி ஆவரோ? (அப்படிசெய்யும்) என்னை உம்மால் அனுப்பப்பட்ட பின் பிரீதியுடையவராக அவர் பேசட்டும். இதனை (நான்கேட்கும்) மூன்றுவரங்களில் முதலாவதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கக. என்னுடைய அனுக்கிரகம் பெற்றவனாய், என்னிடமிருந்து (நீ) விடுபட்டபின், உத்தாலகனுக்கும் ஆருணிக்கும் பிறந்த பிள்ளையாகிய உன்பிதா உன்னைப்பார்த்துக் கோபமற்றவனாய் இனிவரும் இரவுகளில் சுகமாகத் தூங்குவான்.

கஉ. (யமனே!) சுவர்க்கலோகத்தில் நோய் நிமித்தமான பயம் சிறிது மில்லை. அவ்விடத்தில் நீர் இல்லை, அதில் (யாரும்) கிழத்தனத்தால் பயப்படுகிறதில்லை, பசிதாகம் இரண்டையும் கடந்து சுவர்க லோகத்தில் ஆனந்தப்படுகிறார்கள்.

கங. சுவர்கலோகத்தையடைய சாதகமான அக்னியைப் பிரசித்தமான நீர் அறிவீர், ஓயமனே! சிரத்தையுடன் கூடின வெனக்கு (அதைச்) சொல்லும், சுவர்கலோகத்தினர் முத்தியை எந்த அக்னி ஞானத்தா லடைகிறார்களோ? (அந்த வக்கினியைப்பற்றி) இரண்டாவது வரத்தால் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கச. ஓநசிகேதசே! சுவர்கசாதனமான அக்னி * ஞானத்தை நான் அறிந்தவனாய் உனக்குச் சொல்லுகிறேன். அதை என்னுடைய வார்த்தையினின்றும் தெரிந்துகொள், அநந்தலோகப்ராப்திக்கு (நித்தியலோகத்திற்குச்)† சாதனமாயும், திரும்பிவாராமைக்கு ஏதுவாயும், இருதயகுகையிலிருப்பதுமான இந்த அக்னியை நீயறி.

---

*அக்னி ஞானத்தைச் சொர்க்கசாதனமாகக்கூறி, புருஷன் போஜனம் செய்யும் வஸ்துக்களை அவ்வக்கினி பாகஞ்செய்கிறபடியால், அவ்வக்கினி இருதய குகையிலிருக்கிறானென்று இங்குக்கூறியிருக்கவும், இருதயகுகையில் என்றதனாலேயே அவ்வக்கினி விஷ்ணுவேயெனவெழுதி மூல சுலோகத்தினுரையை மத்துவாசிரியரிடர்ப்படுத்தியலைத்தனர். இவருரை மணம்பெறுமாறு எங்ஙனம்?

யோகதத்வோபநிஷத்தானது "ஸ்மரந்நாராயணம்தேவம் சதுர்ப்பாஹும் கிரீடிநம், சுத்தஸ்படிக ஸங்காசம் பீதவாஸஸ ஸமச்யுதம், தாரயேத்பஞ்சகடிகாஸ்ஸர்வபாபை: ப்ரமுச்யதே, ததோஜலாத்பயம் நாஸ்தி" என விஷ்ணுமூர்த்தி ஜலதத்துவதேவதை யென்றும்; "த்ர்யக்ஷந்து வாதம்ருத்ரம் தருணாதித்யஸந்நிபம், பஸ்மோத்தூளி தாஸர்வாங்கம் ஸுப்ரஸந்நமமநுஸ்மரந், தாரயேத்பஞ்சகடிகா வந்ஹிநாஸௌநதஸ்யதே" "என உருத்திர மூர்த்தி அக்னிதத்துவதேவதை எனவும் பரிஷ்கரித்து விட்டபடியால், இவருரை தடுமாற்றமுடையதாம். அன்றியும், "ருத்ரோவா ஏஷயதக்னி:" எனவும், "இமம்பசும் பசுபதேதே அத்யபத்நாம்யக்கே வீக்ருதஸ்யமத்யே" எனவும் வரும் சுருதி வாக்கியங்கள் இவருரையை அநாதரணீயமாக வொதுக்கி ருத்திரமூர்த்தியே அக்கினிசொரூப னென்பதை ஆதரணீயமாக்கின.

†அநந்தலோக மென்பது நித்தியலோக மாகையால், இந்தலோகம் விஷ்ணுவுக்கேயுரியதென இராமாநுஜரும், மத்துவரும் எழுதிவைத்தனர். நித்தியலோகமானது நித்தியனாற்கிடைப்பதன்றி, அநித்தியனாற் கிடைப்பதன்றென வேதமுணர்ந்தோர் விளம்புவர். "ப்ரம்ஹாவிஷ்ணுச்ச ருத்ரச்ச, ஸர்வே வாபூதஜாதய: நாசமேவாநுதாவந்தி" எனத்திரிமூர்த்திகளும் பிறந்தார்கள் இறந்தார்கள் என வெளிப்பட்டமையின் இவர்க்குரிய உலகங்கள் அநித்தியமேயாம். அன்றியும் அதர்வசிகோபநிஷத்து "நகாரணம்" என மூவரையும் பிரதிஷேதித்து "காரணந்துத்யேயச்சம்பு:" எனப் பூஷித்தமையின் சிவபெருமானுலகே நித்தியமென்பது பசுமரத்தாணியாம்.

கடு உலகங்கட்கு ஆதியான அவ்வக்னியையும், யஞ்ஞவேதிக்கு உபயோகமான இஷ்டிகளையும் ‡ எண்ணிக்கையையும், அதில் அக்னி தரிக்கவேண்டிய விதத்தையும் யமன் நசிகேதசுக்குச் சொன்னான். அந்த நசிகேதசும்கேட்ட எல்லாவற்றையும் எமனுக்கு அனுவாதித்துச் சொன்னான், பிறகு யமன் சந்தோஷமடைந்து மறுபடியும் சொல்லுகிறான்.

கசு. சந்தோஷமடைந்தவனாயும், நல்லமன முடையவனாயு மிருக்கிற (யமன்) இப்போதிவ்விடத்தில் மறுபடியும் வரத்தை யுனக்குக் கொடுக்கிறேன் (என நசிகேதசுக்குச் சொன்னான், இந்த அக்கினி (நாசிகேதாக்னி என்கிற) உன்னுடைய பெயரினாலேயே பிரசித்தமாகட்டும், விசித்திர ரூபமான இந்த இரத்தினமாலையை யேற்றுக்கொள். (என்றனன்.)

கஎ. நாசிகேதாக்னியை (ரிக், யஜுஸ், சாமம் என்கிற வேதங்களுடன்) மூன்று தடவை யனுஷ்டித்து (மாதா, பிதா, குரு என்னும்) மூன்று பெயர்களின் சம்பந்தத்தை யடைந்து, (யஞ்ஞம், தானம், தபசு என்னும்) மூன்று கர்மங்களைச் செய்கிறவன் ஜனன மரணங்களைக் கடக்கிறான். பிரமனிட முண்டானவனாயும், தேவனாயும், தோத்திரிக்கத்தக்கவனாயு மிருக்கிற அக்னியை அறிந்து பார்த்து இந்தச் சாந்தியை அதிகமாக வடைகிறான்.

கஅ. முன் சொன்னபடி திரிநாசிகேதபுருஷன் இந்தக் (கற்களின் சொரூபம், அவைகளின் சங்கியை, அவைகளி லக்கினி தரிக்கும் விதம்) மூன்றையும் தெரிந்துகொண்டு இப்பிரகார மக்னியை யறிந்தவனாய் எவன் நாசிகேதாக்கினியைச் செய்கிறானோ? அவன் இராகதுவேஷ முதலியவற்றைச் சரீரவியோகத்திற்கு முன்னமே நீங்கிமானசதுக்கரகிதனாய்ச் சுவர்கலோகத்தை * யடைகிறான்.

---

‡ இஷ்டிகள் = செங்கற்கள். இவற்றின் எண்ணிக்கை 360 எனவும், 1080 எனவும் பாஷ்யங்களிற் கூறப்பட்டுள்ளன. இக்கற்களைக்கொண்டு அக்கினி வளர்க்க யஞ்ஞவே திகட்டுவது.

* "ஸ்வர்க்கலோகா வமிர்தத்வம் பஜந்தே" என்னும் வாக்கியத்தால், ஈண்டுக்குறித்த சுவர்க்கலோகமானது மோக்ஷலோகத்தைக் கூறுவதென்றார் இராமாநுஜரும், மத்துவரும் இஃதுண்மையே. ஆனால் இம்மோட்சலோகம் வை

ககூ. நாசிகேதசே! சுவர்கசம்பந்தமான இந்த அக்னிவரமானது உனக்குக் (கொடுக்கப்பட்டது) இந்த அக்னியை ஜனங்கள் உன்னுடைய (பேராலேயே) சொல்லப்போகிறார்கள், மூன்றுவது வரத்தைக் கேட்டுக்கொள்.

உ0. (யமனே!) மரணமடைந்த மனிதன் விஷயத்தில் சிலர் இந்த ஆத்மா விருக்கிறதென்றும், சிலரிருக்கவில்லை யென்றும் (சொல்லுகிறார்கள்) இந்தச்சந்தேக மெதுவோ அதை நீ யுணர்ந்த யானறிய விரும்புகிறேன் நான்கேட்கும் வரங்களுக்குள் இது மூன்றுவதுவரம்.

உக. ஓ நசிகேதசே! இவ்விஷயத்தில் தேவதைகளாலும் பூர்வகாலத்தில் சம்சயிக்கப்பட்டது, இது சுலபமாகத் தெரிந்து கொள்ளத் தக்கதல்ல, இத்தர்மம் சூட்சுமமானது, வேறான வரத்தைக் கேட்டுக் கொள், என்னை நிர்ப்பந்தம் செய்யவேண்டாம், என்பொருட்டு இவ்வரத்தை விட்டுவிடு.

உஉ. ஓ யமனே! இவ்விஷயத்தில் தேவதைகளாலுங்கூடச் சந்தேகிக்கப்பட்டிருப்பது உண்மையல்லவா? நீரும் இது செவ்வையாக அறியத்தக்க தல்லவென்று சொன்னீர்? (அக்காரணத்தால்) இத் தத்துவத்தைச் சொல்லுகிறவன் உமக்குச் சமானமான வேறொருவன் அக

குண்டமென்று அவர்கள் கூறியது சுருதியிற்காணாத சூசனமாம். எங்ஙனமெனின்? "ஸப்தம்யாம் வைஷ்ணவம்பதம்" என ஊர்த்துவலோக சுவர்க்கங்களில் ஏழாவதாகவுள்ளது வைகுண்டமெனும் விஷ்ணுபதமென நாதபிந்தூபநிஷத்தும், "நப்ரஹ்மலோகோ வைகுண்டம் நகைலாசம்நசாங்யதா" என வைகுண்டத்தைப் பிரகிருதிசம்பந்தமாக்கித் தேஜோபிந்தூப நிஷத்தும்ஓதுகின. இதில் கைலாசமு மிருக்கிறதேயெனின்? அதுபிரகிருதிசம்பந்தமானதேயன்றி அப்பிராகிருத கைலாசமன்று. இங்ஙனம் வைகுண்டத்தையும் கூறுதலடாதோவெனின்? விஷ்ணுபிரகிருதிவாஸ ஜீவனெனவும், பசுவெனவும் "நகாரண" சப்தத்தால் அதர்வசிகோப நிஷத்துத் தீர்மானித்து விட்டமையின் இவருலகம் அப்பிரா கிருதமாவ தெங்ஙனம்? ஈண்டுக்குறித்த சுவர்க்க சப்தத்திற்கு பொருள் அப்பிராகிருத சிவகயிலாசமே யாமென்பது சாமஞ்ஜசமாம். தொகுதி-க-பகுதி-கஉ, பக்கம்-ரு0க-ல் குறிப்பினையும் கவனிக்க.

ப்படான், (நான் கேட்ட) இவ்வரத்தினுக்குச் சமானமான வரம் வேறொன்றுமில்லை.

உங. ஓநசிகேதசே! நீ கேட்டவரத்திற்குச் சமானமான வேறொன்று நினைத்தால் கேட்டுக்கொள், தனத்தையும் தீர்க்காயுளையும் கேட்டுக்கொள், விஸ்தாரமான பூமியில் நீ இராஜாவாகப்பிற, இச்சிக்கக் கூடிய வஸ்துக்களுக்குள் இச்சையடைந்தவனாகச் செய்கிறேன்.

உச. விஸ்தாரமான இராச்சியத்தைக் கேட்டுக்கொள், நீயும் எத்தனை வருடங்கள் ஜீவிக்க விச்சிக்கிறாயோ அதுவரையில் ஜீவிப்பாயாக, நூறு வருடம் ஜீவிக்கும்படியான புத்திரர்கள் பௌத்திரர்கள் மாடுகள் யானைகள் குதிரைகள் சுவர்ணம் பூமண்டலாதிபத்தியம் இவைகளைக் கேட்டுக்கொள்.

உரு. ஓநசிகேதசே! எந்தெந்த விச்சைகள் மனிதலோகத்தில் அடையத்தகாதவையோ (அந்தச்) சமஸ்தமான இச்சைகளையும் இஷ்டப்பிரகாரம் கேட்டுக்கொள். (அன்றியும்) இரமணீயமான வர்களாயும் இரதம் வாத்தியங்களோடு கூடினவராயுமுள்ள அப்ஸரஸ்திரீகள் மனிதர்களால் அடையத் தகாதவர்கள், என்னால் கொடுக்கப்பட்ட இம்மாதர்கள் உனக்குச் சுசுருஷைசெய்ய வைத்துக்கொள், மரணத்தைக்கேட்க (நீ) அருகனல்ல.

உசா. ஓயமனே! மனிதனுடைய சகலவிந்திரியங்களுடன் யாதொரு தேஜசுண்டோ அவை குறைந்துவிடுகின்றன. சமஸ்தமான ஆயுளும் அற்பமே, உம்முடைய இரதங்கள் நாட்டிய கானங்கள் உமக்கேயிருக்கட்டும்.

உஎ. உம்மைப் பார்த்தோமானால் தனத்தை யடைவோம், நீர் எதுவரையில் யமபதவியி லிருக்கிறீரோ (அதுவரையில்) ஜீவிக்கிறோம், எனக்குப் பிரார்த்திக்கத்தகுந்த வரமோவெனில் நான்கேட்டதுவே

உஅ. ஆயுளின் குறைவை யடையாத தேவதைகளின் சமீபத்தை யடைந்த மனிதன் ஜனனமரணங்களுடன் கூடின புத்திரன் முதலானவர்களை எங்ஙனம் பிரார்த்திப்பான், எந்தவிவேகி ஸ்திரீடையாகிய சுகங்களை வெகுகாலம் நீடித்திருப்பதாக நினைப்பான், அதிதீர்க்கமான ஆயுள் விஷயத்தில் ஆசைகொள்வான்.

உகூ. ஆத்மா உண்டா இல்லையாவெனச் சந்தேகிக்கிற இந்தப் பெரிதான பரலோக விஷயத்தில் எது நிச்சயமோ அதனை எங்கட்குச் சொல்லும். மிகவும் சூட்சுமமான இந்த ஆத்மசம்பந்தமாக அடைய தக்க வரத்தைவிட நசிகேதசாகிய (நான்வேறு) கேட்பதில்லை.

மணவழகு.

---

## நீதி-அ.

"பெரியோர்கள், மனோவாக்குக்காயம் என்னும் முக்கரணங்களும் சுத்தமாயிருப்பார்கள். கேட்போர்கள் காதுக்கு அமுதம்போல் இன்பமாகப் புராணேதிகாசங்களைச் சந்தேகமறச் சொல்லும் திறமையுள்ளவர்களாக இருப்பார்கள். மூவுலகங்களுக்கும் உபகாரத்தையே மேன்மேலுஞ் செய்துகளிக்கச் செய்வார்கள். அயலாருடைய சத்குணம், பரமாணுபோல் கொஞ்சமாக விருந்தாலும் அதையொரு பெருமலையாக எங்கும் புகழ்ந்தே பேசுவார்கள். தாமும் நித்திய சந்துஷ்டர்களாக விருப்பார்கள். இக்குணங்களை யுள்ளவர்கள் தாமறிவிற் சிறந்த பெரியோர்களென்று சொல்லப்படுவார்கள், அவர்கள் அதிகமாகக் கிடைக்கமாட்டார்கள்".

## நீதி-கூ

"ஆசையென்னும் பாசத்தை அறுத்துத்தள்ளு, பொறுமையைக் கைக்கொள்ளு. நீ கற்றகல்வித் தேர்ச்சியிலும், நிறைந்த செல்வத்திலும் உனக்கிருக்கும் அகங்காரத்தை விட்டுவிடு, பாபச்செயல்களைச் செய்யாதே. உண்மையைப்பேசு, நல்ல நடவடிக்கையுடைய பெரியோர்கள் நடக்கிறபடி நட, வித்துவான்களிருக்குமிடம் தேடிச் செல்லு. மரியாதைப் படுத்தவேண்டிய வர்களைக் குறைவில்லாமல் மரியாதைப்படுத்து. உன்னுடைய சத்துருக்களையுங்கூட நீ யனுசரித்து நட. ஆசாரியன், தந்தை, தாய்முதலான பெரியோர்களை அந்தந்தக் காலங்களில் விதிப்படி இவனே பூசிக்கிறானென்று பேரெடு, நல்ல கீர்த்தியைச் சம்பாதித்துக்கொள்ளு. வருத்தமுற்று உன்னிடம் வந்து உதவி கேட்பவரிடம் தயவுசெய்து உபகாரஞ்செய் இவ்விதம் செய்வதெல்லாம் பெரியோர்களுடைய நடத்தையாகும்."

உ

சிவமயம்.

# சிவோபாசனாமகிமை.

தொகுதி 3. பக்கம் 280. தொடர்ச்சி.

---

## காசி காண்டம்.

“அறிவினாலேனும் அருளினாலேனும் அருள் விளையாட்டினாலேனும்-கிறுதினாலேனும் வஞ்சகத்தேனும் கிளர்பொருணசையினாலேனும்-இறைவனதிலிங்கப் பூசனைபுரிந்தோ ரெந்தை தன்பெயரினை நவின்றோர்-குறைவறுதுறக்க மடைவது திண்ணங்கொன்றை வேணியன் றிருவாணை”—

கடவுள் ஒருவர் ஆன்மாக்களாகிய நமக்கெல்லாந் தலைவராக இருக்கிறாரென்றும், அவர் நம்பொருட்டு அதாவது நாம் மலமாயா கன்மங்களிலிருந்து நீங்கி மோட்ச மடையும் பொருட்டுச் சிருட்டி திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களை யியற்றி வருகிறாரென்றும், ஆதலால் அக்கடவுளை நாம் எப்பொழுதும் வழிபட்டு அவருடைய அநுக்கிரகத்தைப்பெற முயல வேண்டு மென்றும் வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய சகல சாஸ்திரங்களும் உரைக்கின்றன. அவர் நம்பொருட்டுச் செய்யும் அத்தொழில்களிலும் நாம் அவரை வணங்கும் வணக்கத்திலும் நமக்கு உண்டாகும் நன்மையாதென்று நாம் சற்று யோசித்துப்பார்ப்போம். இப்பொழுது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளால் பரிசம், இரதம், உருவம், கந்தம், சத்தம் என்னும் ஐம்புலன்களையும் நுகர்ந்து அறிவு விளக்கம் பெற்றவர்களா யிருப்பினும் இப்படியே எப்பொழுதும் அறிவுவிளக்கம் பெற்றவர்களா யிருப்பதில்லை. ஒருசமயத்தில் அறிவு விளக்கம் பெற்றும் மற்றொரு சமயத்தில் அறிவு விளக்கமில்லாமலும் இருக்கிறோம். அறிவு விளங்கும் சமயத்தை விழிப்பென்றும், அறிவு விளங்காத சமயத்தை உறக்கமென்றுஞ் சொல்லுகிறோம்.

அறிவுடையோர் விழிப்பைச் சகலமென்றும், உறக்கத்தைக் கேவல மென்றும் உரைப்பர். இப்படி இரண்டு அவஸ்தைகளும் மாறி மாறி வருவதற்கு நியாய மென்னவென்று யோசிக்கில், ஆணவமென்னும் ஒரு மலமானது நம்முடைய அறிவைவிளக்க வொட்டாது தடைசெய்தலால் கேவலம் என்னும் அவஸ்தை உண்டாகிற தென்றும், சில மாயாகருவிகள் அத்தடையை அறிவைவிளக்குதலால் சகலம் என்னும் அவஸ்தை நிகழ்கின்ற தென்றும் வெளியாகும்.

நாம் இந்தப் பிறப்பையடைதற்கு முன் இவ்வளவு சொற்ப அறிவு தானும் இல்லாமல் முழுமயக்கத்தி லிருந்தோம். அப்படியிருந்த நமக்கு இந்த மாயாகருவிகளைக் கொடுத்து அறிவை விளக்கியவர் கடவுளே. அக்கருவிகளைக் கொடுக்கும் அவருடைய செயலே சிருட்டி. அவற்றை நம்மிடத்துச் சிலகாலம் நிறுத்துதலே திதி. அவற்றோடு கூடி அறிந்து ஐம்புலநுகர்ச்சி செய்துவருங்காலத்து நாம் அதனால் இளைப்படையின் அவ்விளைப்பொழித்தல் காரணமாக அறிகருவிகளை நீக்குதலே சங்காரம். வினைக்கேற்ற போகங்களை உணர்த்தி ஏனையவற்றை மறைத்துவைத்தலே திரோபவம். வினைக்கேற்ற போகங்களை நுகர்ந்து வருங்காலத்து அதனால் ஆணவமலம் பக்குவப்பட அதன் சத்தி நம்மை மறைத்தற்கேற்ற வலியற்றதா யொழியும்.

## சிதம்பர மும்மணிக் கோவை

### ஆசிரியப்பா.

"பூமலி கற்பகப் புத்தேள்வைப்பும்
நாமநீர் வரைப்பி னிலவளாகமு
மேனைய புவனமு மெண்ணீங்குயிருந்
தானேவகுத்ததுன் றமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப்பகுதி
யனைத்தையுங் காப்பதுன்னமைத்த கைத்தலமே
தோற்றுபு நின்றவத் தொல்லுலகடங்கலு
மாற்றுவ தாரழலமைத்த தோர்கரமே
ஈட்டிய வினைப்பய னெவற்றையு மறைத்துநின்
றூட்டுவதாகு நின்னூன்றிய பதமே
யடுத்தவின்னுயிர்கட் களவில் பேரின்பங்
கொடுப்பது முதல்வநின் குஞ்சிதபதமே"

என ஸ்ரீமத் குமாரகுருபரசுவாமிகள் அருளியவாற்றானுந்தெற்றெனவிளங்கும். பால்பருகும் சிறு குழந்தையின் நோய்தீர்தற்கு அக்குழந்தையின் தாயானவள் மருந்தருந்தி அம்மருந்து, பாலின் சாரமாக குழைந்தைக்குச் சார்ந்து அக்குழந்தையின் நோய் நீங்குமாறுபோல, மலர்தலை யுலகின் கண்ணுள்ள ஆன்மாக்களாகிய குழந்தைகளின் பிறவிநோய் தீர்தற் பொருட்டுப் பரமகருணா நிதியாகிய பரமேசுர பிரபுவானவர் சிருட்டியாதி பஞ்சகிருத்தியத் தொழிலைச் செய்கின்றன ரென்பது.

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர் தொகுதிக் கின்னருள் கிடைப்ப"

என்பவற்றானும் விளங்கும். அன்றி மாயாகருவிகள் தரும் அறிவு விளக்கத்தால் நாம் வேத ஆகமங்களை ஓதிக் கடவுள் ஆன்மா மலம் என்னும் திரிபதார்த்தங்களைஉணர்ந்து கடவுள் வழிபாடாகிய சிவபுண்ணியம் ஈட்டுதற்கும் உபகாரமாம் ஆதலால் மல நீக்கத்தின் பொருட்டு கடவுள் இந்தஉபகாரஞ் செய்துவருவது நமக்கு எவ்வளவு நன்மையாம்.கடவுள் நம்மை இவ்வாறு பிறப்பிறப் பிற்புகுத்தி மாயாகருவிகளால் உணர்வெழச்செய்து இன்பதுன்ப நுகர்வித்து வருவதெல்லாம் நம்முடைய மலமாயா கன்மங்களை அறவொழித்து நீக்குதற் பொருட்டாம்.

ஆதலால் இத்தருணத்தை வீணுக்கி விடாது அவருடைய சகாயத்தைப் பின்பற்றி அம்மல மாயாகன்மங்களை யொழிக்கவும், என்றும் அழியாப் பேரின்ப வாழ்வாகிய மோட்சத்தை யடையவும் முயலுதல் வேண்டும். நாம் அம்மல மயக்கத்தில் ஆழ்ந்திருக்கிறபடியால் நாமாக அதைவென்று அந்நிலையை யடைந்துகொள்ள நம்மால் இயலாது. அதில் அமிழ்ந்துந் தன்மையே தவிர அதை வெல்லுந்தன்மை நமக்கில்லை. கடவுளோ அம்மலமயக்கில் ஆழ்ந்தவரல்லர். மலமயக்கில் ஆழாமல் அதை வென்று கீழ்ப்படுத்தி யொழிக்கத்தக்க சிலசத்திகள் அவரிட மிருக்கின்றன.அவை முழுது முணர்தல்,முழுதுஞ் செய்தல், நித்தமகிழ்ச்சி, அநாதியாகிய சுதந்திரத்தன்மை, கெடாத சத்தியுண்டமை, அளவிறந்த சத்தியுடைமை என்னும் சாட்குண்ணியங்களாம். அவை அவரிடத்து விளங்குதலினாலே மலமாயா கன்மங்கள் அவரை யடையாவாயின, அது மட்டோ ஆதித்த ஒளியின்முன் இருள்வலி

குன்றி யொழிதல்போல, அவருடைய சந்நிதியில் அவைவலி குன்றி யொழிந்தும் போகின்றன. நம்மிடத்து அவ்விதசத்திகள் இல்லை அது பற்றியே நாம் அம்மலவலியை வெல்ல இயலாமல் அதனுள் அமிழ்ந்து கின்றோம். ஆனால் அவருடைய அவ்வறுகுணங்களைப் பெறுமுரிமை நமக்குண்டு. அவரைவணங்கி அவருடைய குணங்களை நாம் பெறு வோமானால் அக்குணங்களால் விளங்கும் நம்மை மலமாயா கன்மங் கள் அதன்பின் பந்திக்கமாட்டா. கண் தனித்திருக்கும்போது. இருள் அதனை மறைக்குமாயினும் ஆதித்தவொளியோடு கூடிநிற்கும் போது அணுவளவேனும் மறைக்க மாட்டாது. நம்முடைய காரியமும் அவ்வாறேயாம். இனிமலநீக்கத்துக்கும் சற்குணப்பேற்றிற்கும் நம் மாற் செய்யப்பட வேண்டியவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் வழிபாடுகளாம். அவை உபாயம் உண்மைஎன இருவகைப் படும் உபாயச் சரியையாதிகள் இருவினையொப்பு மலபரிபாகம் சத்தி நிபாதம் என்னும் இவற்றிற்கேதுவாம். இவற்றின் நிகழ்ச்சியே பக்குவ மெனப்படுவது. அப்பக்குவகாலத்திலே கடவுள் குருமூர்த்தமாயெழு ந்தருளி ஆகமத்திற் சொல்லப்படும் சமயம், விசேடம், நிருவாணம், என்னுந் தீட்சைகளைப் புரிந்து உண்மைச் சரியை கிரியை யோக ஞானங்களில் நிறுத்தி ஞானசமாதி கூடுவித்து அருள்செய்வர். அத் துவ சுத்திசெய்து கன்மமாயைகளைப் போக்கி, உண்மை உபதேசத் தானுந் திருவடி சூட்டுதலானும் ஆணவமல இருளைநீக்கி, அறுகுணங் களையும் ஆன்மாவிற் பதித்து ஆனந்தவாழ்வில் இருத்துதலே தீட்சை யெனப்படுவது, அதன்பின்னர் அச்சிவத்தோடு அத்துவிதமாகக் கல ந்து அப்பேரின்பநிலை பிறழாது அதின் மூழ்குதலே ஞானசமாதி யெனப்படுவது. இச்சமாதி கைவரப்பெற்றால் பரமானந்த நித்திய வாழ்வாகிய முத்தியைத் தலைப்படுவர். ஆதலால் இப்படிப்பட்ட பர முத்தியை நமக்குத் தரவல்ல கடவுளை நாம் என்றைக்கும் மறவாது மெய்யன்போடு வழிபட்டு அவருடைய திருவருளை விரைவில் அடை தற்கு முயலவேண்டுவது ஆவசியகமும் அறிவுடைமையுமாம்.

இன்னும்வரும்,

S. நடேச தேசிகர்
கவர்ன்மெண்ட் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்,
கோட்டச்சேரி.

சிவமயம்.

# "நான் யார்"?

கடவுள், ஆன்மா, கன்மம், அசுத்தமாயை, சுத்தமாயை, ஆணவம் என்னும் ஆறும் அநாதி நித்தியப் பொருள்களாம். இவைகளை பதி, பசு, பாச மென்னு மூன்றனுளடக்கிக் கூறுதலே பெருவழக்காம். பசு மூன்றுவகைப்படும். ஈண்டு சகல வர்க்கத்தினுட்பட்ட ஓர் ஆன்மா தன்னையே, "நான் யார்"? என விசாரிக்கப் புகுகின்றான். அவ்விசாரணை எப்பெற்றித்தோவெனில், நான் முற்றறிவு முதலிய குணங்களையுடைய இறைவனைச் சார்ந்தவனோ, அல்லது அறிவிலாப் பாசத்தைச் சார்ந்தவனோ என்பதாம். சத்தியாகிய பதியினைச் சார்ந்தவனாகில் அசத்தாகிய பாசத்தொகுதியுள் கட்டுண்ணான், அசத்தாகிய பாசத் தொகுதிகளைச் சேர்ந்தவனாகில் அறிவிலா ஜடப்பொருளிலொன்றாகிப்போவன். ஆனாலிவன் பாசப்பிணிப்பால் வந்த சிற்றறிவும் சிறுதொழிலும் தனக்குடைமையைக் கருதிப்பேரறிவும்பேராற் றலுமுள்ள ஒருவன் தனக்குத் தலைவனாயிருத்தல் வேண்டுமென, அனுமானித் துணர்கின்றான். ஆதலினால் பதி, பாசங்களுள்வைத் தெண்ணப் படாமல் ஓர் தனிப்பொருளாய் எண்ணப்படுகின்றான்.

வாக்கிற்கும் மனத்திற்கு மெட்டாத சிவத்தின் முன்னர் உணருரு வாகிய அசத்தெல்லாம் பாழாகலின், சத்தாகிய சிவம் அசத்தாகிய பிரபஞ்சத்தை யறிதல் செய்யாது, அசத்தாகிய பிரபஞ்சம் ஜடமாகலின் சத்தாகிய சிவத்தையறிதல் செய்யாது. அதுபற்றி இவ்வான்மா ஒழிபளவையால் சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையுமாகிய இரண்டு மின்றி நின்றதோர் பொருளெனப் பெற்றாம். ஆயினும், "இருதிறனறிவுள திரண்டலா வான்மா" என்றார் பெரியோர். இதற்கு உரையாசிரியர்கள் சத்து மசத்துமாகிய இரண்டனையு மறியு மறிவு அறிவிக்கப் படுதலாலும் அறிவித்தாலறியுந் தன்மையாலும் போந்தவறிவு சத்து அசத்து என்னும் இரண்டன்பாலு முள்ள அநுபவ அறிவு எனப்பொருள் விரித்துக் கூறுவாராயினர். இனி ஆன்மா இரண்டு மின்றித் தனியன்றான் என்பதை மேல்விளக்கிக்

காட்டுவாம், அது மாயேயங்களில் ஒன்ருகுமோவென ஐயுறுதல். அங்ஙன மாகாமை கூறுவாம்.

1. அவற்றுள் முதற்கண் நிற்பது பஞ்சபூதங்களாம். பஞ்சபூதங்களின் சேர்க்கையாலாவது இம்மானுடயாக்கை, அஃது ஆன்மாவாகுமோ வெனில் சுடு சோற்றின்கண் அவ்வாக்கையின் கிளையாகிய கையினை வைத்தபோது, சுடுகிறதென்று கையினை எடுத்தும், பின் ஆறிவிட்டதென அறிந்துண்டு நின்றதும் அவ்வுடம்பல்லவே. அவ்வுடம்புதானெனக் கூறுவாயாகில்சுடலையின்கண் முருகுந் தானும் பேதமறக்கிடந்து வேம் போது குதித்து ஓடக்காண்கிலமே. காணவில்லையாயினும் பஞ்சபூதங்களி லொன்ருகிய வாயுப்பிரிகையால் அஃதறிந்ததில்லை. அதுவுங் கூடிநிற்கில் அறியுமாற்றலுடையதாமெனில் உறக்கத்தின்கண்ணே அது (வாயு) கலந்து நின்று நீட்டல் மடக்கல் முதலியன உடலின் மாட்டுநிகழ்த்தவும் அவ்வுடல் அறியாத தென்னே? அங்ஙனம் அறியாததால் இவ்வுடல் அறியுமாற்றலுடையதன்று. ஆகவே பஞ்சபூதங்களும் அவைகளின் வழித்தாகிய கருவிகள், 25, நாடிகள் 10, எடணை, 3, ஆக 43 கருவிகளும் அறியுமாற்றலுடையன வல்லவெனக் கூறுக. ஈண்டு நானிவையல்லவென வோர்ந்து தன்னை வேருகக் காணல்கூடும்.

2. ஐம்பொறிகளும் புலன்களும் ஆன்மாவாகாவோ வெனில், கூறுதும். துவக்கு பரிசத்தையறியும், சட்சுரூபத்தை யறியும், சிங்நுவை இரசத்தை யறியும்,செவிசத்தத்தைக் கேட்கும், மூக்குக் கந்தத்தை முகரும் இவைகள் தாம் ஞானேந்திரியங்களும் அவற்றின் விடயங்களுமாம், ஞானேந்திரியங்களே விடையங்களை ஆகாய முதலிய பூதங்களிடமாக முன்று அறியுமெனில்,அவற்றுள் ஒன்றறிந்த தொன்றறியமாட்டாமை யானும் ஒன்று மற்றென்றை யறியாமையானும் இவற்றைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று ஒருங்கே யறிவது வேறென்றுளதாம். ஆதலால் நான் என்பது இந்திரியங்களுமன்று அவற்றின் புலன்களுமன்று என்றுணர்க.

இவ்வாறு உணர்தலால் பொறி, 5, புலன் 5, வாக்காதி 5, வசனாதி 5, ஆக இருபது கருவிகளும் நீங்கும். இவற்றுள் ஒன்ருகாமை யுணரவே 63 கருவிகள் நீங்கினவாம்,

3. இவ்விந்திரிய முதலியன நீங்கிய அளவில் ஒன்றிலேயூற்றி நினைப்பதும், நிச்சயிப்பதும் எழுந்திருப்பதும் சிந்திப்பதுமாயிருப்பதுவே நானெனில் அவையாகாவெனக் காட்டுவாம். நினைத்தல் முதலிய தொழில்களுக்குக் கருவிகளாயுள்ளன மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்பனவாம். இவைகள்தாம் அந்தக்கரணங்களென்றழைக்கப் பெறும். இவ்வந்தக் கரணங்கள் நானெனநின்று அறியாவோவெனில் இவையும் ஒன்றறிந்த தொன்றறியாதே இவை நான்கும் நான்காக வறிகின்றமையால் இவைகளைக் கருவிகளாகக்கொண்டு அறிவது வேறொன்றுளதாம். அது அவற்றோடு கூடி இவை தானாயும் இவற்றிற்கு வேறாயும் நிற்பதாம். ஆதலால் நானென நிற்பது இவ்வந்தக் கரணங்களுக்குப் புறம்பாம். ஈண்டு வாக்கு 4, அந்தக் கரணம் 4, ஆக எட்டுக் கருவிகளும் நீங்கினவாம் ஆக மொத்தம் 71 - கருவிகள் நீங்கினவாம்.

4. இவ்வந்தக் கரணங்கள் நீங்கிய அளவில் இராசதம் தாமதம் சாத்துவிக மென்னும் மூன்றுகுணங்களும் நானென நில்லாவோ வெனில், ஒருவனைக்குணவானென்றும் மற்றொருவனைக்குணவறிவீனனென்றும் அவனுக்கு அது குணமென்றும் கூறப்படுதலால் குணங்கள் வேறாகநிற்கக் கண்டாம். ஆகையால் நானென நிற்பது குணங்களல்லவென வுணர்க.

இனி மேலுமறிய வேண்டுமென்பதோர் ஆசையும் அதன்கண் ஓரறிவும் அதைச் செலுத்துவதுமாகிய ஒரு தொழிலும் நிகழ்கின்றமையால் அவையே நானென நிற்குமெனில், அவை ஒருவன் செய்திகளாய் ஆன்மாவிற் குடம்பாய் அசுத்தமாயையில் தோற்றப்பட்டவைகளாய் முப்பத்தாறு தத்துவங்களுள் வைத்தெண்ணப் படுவனவாயுள்ளன, ஆதலால் அவைகள் (காலாதிதத்துவங்கள்) நானெனநிற்றல் பொருந்தாமையுணர்க, காலம் நியதி கலை வித்தை அராகம் புருடன் மாயை என்னும் தத்துவங்கள் எழனுள், புருடன் என்பது தத்துவத்துள்வைத் தெண்ணப்படுதலால் அது நானென நிற்றற்கு உரியதல்லவாம். ஈண்டுக் குணம், 3, கலாதி 7-ஆக பத்துக் கருவிகளும் நீங்குவனவாம். ஆக மொத்தம் 81 கருவிகள் நீங்கினமை காண்க.

5. நானென்பது இவைகளுள் ஒன்றுமல்லவென நிற்குங்கால் மீளவும் ஆராயத்தக்கதாய் உள்ளச்செய்வதொன்றுறுகின்றது. அது நான் ஆகாதோவெனில், அவ்வாறு உன்னச் செய்வது சுத்த தத்துவ

மாம். சுத்ததத்துவங்க ளறியுமாகில் அவை நம்முள் ஒத்து நில்லாது, ஞானமேயாயும், கிரியையேயாயும், கிரியை ஏறி ஞானங்குறைந்தும், ஞானமேறிக் கிரியை குறைந்தும் ஞானமுங் கிரியையு மொத்தும் இவ்வாறு பலதிறப்பட்டு நிற்றலால் இச்சுத்த தத்துவங்களறியா வென்றுணர்க, ஈண்டுவாயு 10 சுத்த தத்துவம் 5 ஆகப் பதினைந்து கருவிகள் நீங்கும் ஆக 96 கருவிகள் நீங்கினமை யறிக. சுத்த தத்துவம் வாயுவுடன்கூடி நிற்றலைக்கேட்டு உணர்க.

இதுகாறுங் கூறியவாற்றால் அகக்கருவிகள் 36-ம் புறக்கருவிகள் 60-ம் ஆக 96 கருவிகளுள் நான் எனநிற்கு மான்மா ஒன்றாகாமை யறிக. ஆகவே இருவகை மாயைகளினிடத்து நின்று உற்பவித்த தத்துவ தாத்விகங்களுள் ஒன்றாகாமையால் "சார்மாயை நீயல்லை" என்பது பெற்றாம். உச்சுவாசம் நிச்சுவாசம் செய்வதும் மிகமேலானது மானபிராணவாயுவும் நான் அல்லவோவெனில் கூறுதும்.

உயிர், ஆவி, எனவிதந் தழைக்கப் பெற்றதும் மிக மேன்மையுடையதுமாகிய இப்பிராண வாயு எல்லா கருவிகளுக்கும் மிக மேலானதென உபநிடதங்கள் கூறுவதுண்மையே எங்ஙன மெனிற்கூறுவாம்.

வைகரிவாக்கின் வழிவந்த பேச்சு முதலியன தம்முள் தலைமை கருதி இகலி பிரமனிடத்திற்போய் எங்களுள் யார் தலைமையுற்றவர் எனவினவ அவன் "யாருடைய பிரிவினால் இவ்வுடல் மிகவருந்துமோ அவரே உம்முள் தலைமையுடைய ராவர்" என்றனன்.

முதற்கண் வாக்கு நீங்கிப்போய் ஒருவருடத்துக்குப் பின் மீண்டு வந்து என்னையன்றி யிலநீவிர் எவ்வாறு ஜீவித்தீர்கள் என்று கேட்க, மூகையர்கள் வாக்கினாற் பேசாமல் உச்சுவாசம் நிச்சுவாசங்கள் செய்தும் கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் நெஞ்சால் நினைத்தும் பிள்ளைகள் பெற்றும் வாழுமாப்போல நாங்கள் வாழ்ந்தனம் என்றனர். இது கேட்டு வாக்குமீண்டுந் தேகத்து ளூற்றது.

தொடர்ச்சி.

S. பால்வண்ண முதலியார்
திருநெல்வேலி.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவ சித்தாந்த மகாசமாஜத்தின்

## ஒன்பதாவது வருடக் கூட்டம்,

சைவசித்தாந்த மகாசமாஜ ஒன்பதாம்வருடக் கூட்டமானது, 1914-ம் வருஷம் டிசம்பர்மாதம் 25-ம் தேதி, திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடலூர் லார்ட்க்ளைவு தெருவில் அலங்கரித்துள்ள பெரிய தோர் இடத்தில் கூடியது. மகாசமாஜ அங்கத்தவர்களும் அங்கத்தவர்க ளல்லாத பலபக்திமான்களும் வந்து கூடினர். கூட்டம் கூடிய அன்றுமுதல் மூன்று தினங்களிலும் யாவரும் மகிழும் வண்ணம் பின்வருமாறு பல பிரசங்கங்கள் நடைபெற்றன. 24உ வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குமேல் மகாசமாஜ உபசரணைச் சங்கத்தலைவர் ஸ்ரீமான் அ.தா.முத்துக்குமாரசாமி செட்டியார் அவர்கள் சமாஜ உப அக்கிராசனர்ஸ்ரீமான் J.M.நல்லசாமிபிள்ளை அவர்கள் B A,B.L. சமாஜகாரிய தரிசியார் ஸ்ரீமான், கி. குப்புச்சாமிமுதலியார் அவர்கள் ஆகிய இவர்கள் பல பிரபுக்களுடன் திருப்பாதிரிப்புலியூருக்குச் சென்று மடாலயத்தில் வீற்றிருந்த ஞானியார் சுவாமிகளைத் தரிசித்து அவர்களது ஆன்மார்த்தமாகிய குமாரக்கடவுளை எழுந்தருளச் செய்து பல வாத்தியங்கள் புடைசூழ மடாதிபதி அவர்களைச் சிவிகையின்மீது ஆரோகணிக்கச் செய்து பல்லோர் புடைசூழக் கூடலூருக்கு அழைத்துவந்தனர். சுவாமிகளும் தமக்கென விதித்திருந்த திருமடத்துள் இறங்கி அன்பர் பலருக்கும் ஆசி கூறி அன்று இரவு வீற்றிருந்தனர். மறுநாள் பகல் 12 மணிக்குமேல் பல மங்களவாத்தியத்துடன் அக்கிராசனராகிய ஞானியார் சுவாமிகள் தாம் இறங்கியிருந்த திருமடத்தினின்றும் தம்சிவிகையின்மீது பல்லோர்புடைசூழ ஆரோகணித்துவந்து விசித்திரமாக அலங்கரித்திருந்த சபா மண்டபத்தில் நாயகராக அமர்ந்தனர். முதலில் தேவாரபாராயணம் நடைபெற்றது, பிறகு சமாஜ உபசரணைச்சங்கக் காரியதரிசியாராகிய ஸ்ரீமான்,

டி. வைதியலிங்கச் செட்டியார் அவர்களால் கூடலூர் வாசிகளது உப சரணைப்பத்திரம் வாசிக்கப்பட்டது. அதன் பின்னர் சமாஜகாரியதரிசியார் ஸ்ரீமான், கி. குப்புச்சாமி முதலியார் அவர்களால் சமாஜ நிர்வாகசபையினர் கையொப்பமிட்ட உபசரணைப் பத்திரமும், 1914-ம் வருடம் அறிக்கைப்பத்திரமும் வாசிக்கப்பட்டன. இவை முடிந்ததும் சபா நாயகராய் வீற்றிருந்த ஞானியார் சுவாமிகள் தம் ஆரம்பப் பிரசங்கத்தை அறிவு, குணம், செயல் இவையுடையோர் எவரேனும் பூஜிக்கத்தக்கவராவர். இம் மூன்றினுள் ஒவ்வொன்றை அடைந்திருக்கின் அது மிகுதியும் பயன் தராதாகும். இம்மூன்றும் நிறைந்து நின்று ஒழுகுபவரே சைவசித்தாந்திகளாவர். இச்சைவ சித்தாந்திகளால் கொள்ளப்பட்ட சிவமெனும் பொருள், ஒழித்துவிட வேண்டிய பொருளை ஒழித்து நிற்பதும், பொருந்துவனயாவும் பொருந்தியிருப்பதும் ஆகும். அன்றியும் எல்லா மங்களங்களும் நிறைந்திருப்பது சிவம் எனப்படும். மலத்தை ஒழிப்பதே சைவர்கருதுவது. அம்மலம் அனாதியாக இல்லாதது சிவம், சர்வமங்களமும் கூடியதும் மலரகிதமும் ஆகிய சிவம் எனும் பொருளை அடைந்தாலன்றி அடையக்கூடிய நன்மையை அடைதல் ஆகாது. இதை அறியாதார் சைவத்தைப் பழிக்கின்றனர். இத்தகைய சிவபெருமானது பெருமையைக் கூறுவதே சைவ சித்தாந்தமாகும் வேதத்தில் மறைந்திருக்கும் பொருள் சைவசித்தாந்தமேயாகும். இவ்விதம் கூறுவதால் வேதாந்தத்திற்குச் சித்தாந்தம் புறம்பானது என்று கூறுதற்கு இல்லை. வேதாந்தத்தின் பொருளே சித்தாந்தமாகும், எனச் சிவபெருமானின் பரத்துவத்தையும் சைவ சித்தாந்தத்தின் மேன்மையையும் கேட்டோர் களிக்கும்படி வெகுவிரிவாகப் பேசினர். இரண்டாவது சமாஜஉபஅக்கிராசனர் ஸ்ரீமான் J.M. நல்லசாமிபிள்ளை அவர்கள் B.A,B.L. "ஞானப்போர்" எனும் விடயத்தைத் திருவாசகத்தை முதலாகக்கொண்டு சித்தாந்தத்தில் தமக்குள்ள அனுபவத்தின்படி நயம்படப்பேசினர். பின்னர் இப்போது நடக்கின்ற ஐரோப்பிய யுத்தத்தில் தமது மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியாருக்கு ஜயம்வருதல் வேண்டும் என்று சமாஜம் சிவபெருமானைப் பிரார்த்திப்பதாகவும், இராஜப்பிரதிநிதி அவர்களுக்குத் தமது குமாரரின் மரணத்தால் நேர்ந்த ஆற்றொணாத் துயரைக்குறித்து வருந்துவதாகவும் தந்திகள் அனுப்பப்பட்டன. மூன்றாவது, பழவேற்காடு பிரம்மஸ்ரீ அமுதேஸ்வர குருக்கள் அவர்கள் "பதி பசு பாசத்திரயம்" எனும் விடயத்தைத் தமது ஆகம சாத்திரப் பயிற்சிக்குத்தக்க

அளவாகப் பல மேற்கோள்களை வடமொழி ஆதாரத்துடன் எடுத்துக்காட்டி வெகு நயம்படப் பேசினர். நான்காவது. ஸ்ரீமான் முத்தைய பிள்ளை அவர்கள் "தாயுமானவர் கொள்கை" என்பதை ஊழ் வலியதாயினும் அவன் திருவருள் இருக்குமாயின் ஊழையும் வெல்லுதல் கூடும் என்றும், தாயுமானவர்க்கு விக்கிரகாராதனை ஒப்பு என்றும், திருவடியடைதல் என்பது அருளொடு பதிதல் என்றும், ஓர் உலகத்தே சென்று முத்தி அடைதல் என்பது இல்லை என்றும், நூலறிவு ஒன்று ஆசிரியர் போதிப்பது ஒன்று ஆகிய இரண்டனுள் ஆசிரியர் போதிப்பதே மிகச்சிறந்தது என்றும் ஆகிய பல விஷயங்களைப் பல்லோர் கேட்கப் பகர்ந்தனர். ஐந்தாவது. குளித்தலை பிரம்மஸ்ரீ அரங்கசாமி அய்யர் அவர்கள் "சரியையாதிகளின் சொரூபம்" எனும் விடயத்தை மேற்கொண்டு அறியாதார் பலர் சரியை யாதிகள் அஞ்ஞான வழிபாடு எனக் கூறினர், நமது ஆசாரியர் ஞானவழிபாடு என்றனர், பட்டினத்தடிகள் முதலிய பெரியோர் சரியையாதிகளையே செய்தனர் என வடமொழி, தமிழ்மொழிப் பிரமாணங்களைக் கொண்டு சரியையாதிகளே முத்தியடைதற்கு மார்க்கம் எனப் போதித்தனர். ஆறாவது, ஸ்ரீமான் பொன்மார் நடேச முதலியார் அவர்கள் "விருந்தோம்பல்" எனும் விடயத்தை எடுத்து பெரிய புராணத்தையும், திருக்குறளினையும் தமக்கு ஆதாரமாகக் கொண்டு கேட்போர் மகிழ்வெய்த விருந்தோம்பலைப் பற்றிப் பேசினர். பிறகு சபாநாயக சுவாமிகள் அன்று நடந்த ஒவ்வொருவர் பிரசங்கத்தின் அரும்பொருளை யாவர்க்கும் எடுத்துக்கூறித் தமது அபிப்பிராயங்களையும் எடுத்துக் கூறினர். இரவு 8-மணிக்கு ஒவ்வொருவரும் தத்தமக்கு விதித்த இருக்கைகளுக்கு ஏகினர். இரண்டாம்நாள் காலையில் 8-மணிக்குச் சமாஜ அங்கத்தவர்கள் யாவரும்சுவாமிகள் இருந்த திருமடத்தில் கூடிச் சமாஜ சம்பந்தமாகிய பலவிஷயங்களைப் பேசி முடித்தனர். பின்னர் யாவரும் சுவாமிகளுடன் சபாமண்டபத்திற்குச் சென்று தேவார பாராயணம் முடிந்தபின்னர், அன்று முதலாவதாக ஸ்ரீமான் மஞ்சகுப்பம். வை.கந்தசாமி முதலியார் அவர்கள் "விநாயகர் மகிமை" எனும் விடயத்தை எடுத்துப்பேச ஆரம்பித்தனர். முதலியார் அவர்கள் தாம் எடுத்துக்கொண்ட "விநாயகர் மகிமை" என்னும் விஷயத்தைப் பல ஆதாரங்களோடு கூறிப் பலரும் மகிழ்வெய்தப் பேசினர். இரண்டாவது புதுவை ஸ்ரீமான் பங்காருபக்தர் அவர்கள் "பரோபகாரம்" என எடுத்து நன்னெறி அடைதற்குப் பரோபகாரமே சிறந்தது எனப் பலரும்அறி

யும் வண்ணம் பகர்ந்தனர். மூன்ருவது போளூர் ஸ்ரீமான் ஆ.தா.அர ங்கசாமி நாயகர் அவர்கள் "அறம்" என எடுத்துப் பாரதத்துள் தமக் குள்ள பயிற்சியினுல் பல கதைகளைக் கூறி அறமே சிறந்ததென அறைந்தனர். நான்காவது சித்தூர் ஸ்ரீமான் அரங்கசாமி அப்பா அவர்கள் "உருத்திராக்கம்" என எடுத்து எல்லா மணிகளிலும் உரு த்திராக்க மணிகளே மேலானவை, கண்டிகையைப் பூணுதலாலே எல் லாவற்றையும் கண்டித்து நன்னெறி அடைதல்கூடும் என்றும் உரு த்திராக்கத்தைப் பற்றி மிக உருக்கமாகப் பேசினர். ஐந்தாவது ஸ்ரீமதி சகிந்தராபாத்து ஆண்டாள் அம்மாள் அவர்கள் பெரிய புராணத்துள் மங்கையர்க்கரசியார் சரிதத்தை எடுத்துக்கொண்டு சிற்றுயிர்களையும் இழக்க அஞ்சுகின்ற சமணர் தம்மத விரோதிகளைப் பொசிக்கவிடத் துணிந்தனர் என்றும், மற்ற மங்கையர் எல்லாம் பின்தொடர்ந்து செல்லும் நெறியைப் பாண்டிமாதேவி கைப்பற்றினர் ஆதலால் அவர் மங்கையர்க்கரசி என அழைக்கப்பட்டனர் என்றும், இன்னும் பல ஞாயங்களை எடுத்துக்காட்டி மங்கையர்க் கரசியர் சிறப்பெல்லாம் கூறினர். ஆருவது. மன்ஞர் ஸ்ரீமான் R. S. சுப்ரமண்யம் "Eight flowers of Life or Saiva Siddhanta in practise" எனும் விஷய த்தை ஆங்கிலத்தில் எடுத்துக் கொண்டு சித்தாந்த உணர்ச்சி ஈதென ஆங்கிலம் உணர்ந்தார் யாவரும் அறிய அழகுபடப் பேசினர். பிறகு சபாநாயகர் அவர்கள் அன்றுபேசிய உபந்நியாசகர் பேச்சுகளிலுள்ள சாரங்களை எல்லாம் எடுத்துக்கூறி, தமது அபிப்பிராயங்களையும் கேட்போர் மனம்களிக்கப் பேசினர். இரவு 8-மணிக்குத் தத்தம் இரு க்கைக்கு ஏகினர், மூன்றும்நாள். யாவரும் ஒருங்கு கூடிப் புகைப்ப டம் எடுத்த பின்னர் சமாஜ அங்கத்தவரின் கூட்டம் சபா மண்டபத் திலேயேகூடப்பட்டுச் சமாஜக் காரியங்களை எல்லாம்முடித்துத்தத்தம் இருக்கைக்குச் சென்று உணவு முதலிய கொண்டபிறகு சபாநாயக சுவாமிகளுடன் சபா மண்டபத்தில் வந்து அமர்ந்தனர். தேவார பாரா யணம் முடிந்த பின்னர் ஸ்ரீமான் மாகரல் கார்த்திகேய முதலியார் அவர்கள் "தமிழ்" என்னும் விஷயத்தை ஆரம்பித்துத் தமிழை ஒவ் வொருவரும் படித்தல் வேண்டும் என்றும் அவ்வாறு படியாவிடின் தமிழ் விருத்தியடைதல் ஆகாது என்றும் தமிழ் உற்பத்திக்கு இடம் மூங்கில் என்றும் தமிழ்மிகப் பழைமை என்றும், தமிழ்ப்பாஷைக்கு முன் ஒலிக்குறி, கட்குறி, கைக்குறி முதலியவைகளே பாஷைகளாக இருந்தன வென்றும், மனிதன் தன் வாழ்க்கையில் செய்யவேண்டு

வன இரண்டு காரியங்கள் என்றும் அவற்றில் ஒன்று சும்வாதியானம் என்றும் மற்றொன்று தமிழை ஓதுதல் என்றும் பிரசங்கித்தனர். இரண்டாவது ஸ்ரீமான் C. T. பார்த்தசாரதி முதலியார் அவர்கள் B. A. L.T. "சண்முகாவதார மான்மியம்" எனும் விஷயத்தை மேற்கொண்டு குமாரக் கடவுளுக்குள்ள பரத்துவத்தைக் கூறுங்கால் ஸ்ரீ கந்தமூர்த்தியே சிவபெருமான் என்றும் ஆன்மாக்களின் பொருட்டுக் கடவுள் அவதரித்தல் அவ்வான்மாக்களின் மோட்சலாபத்தைக் கருதித்தமது எல்லையைக்கடந்து வருதலே அவதாரம் என்றும், பலவடமொழி தமிழ்மொழிப் பிரமாணங்களோடு பிரசங்கித்தனர். மூன்றாவது. ஸ்ரீமான், புதுவை, கு. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் "மனிதர்கடமை" எனும் விஷயத்தை உபந்நியாசிக்க ஆரம்பித்துக் கடவுளைத்தொழுதலே மனிதர்கடமை என்னும் நோக்கத்துடன் பிரசங்கித்தனர். நான்காவது. ஸ்ரீமான், ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்கள் B. A L T. "சைவசமயத்திற்குப் பாடுபடுமுறை" என்பதைத் தம் விஷயமாக எடுத்துக் கொண்டு சைவசமய சாரமாகியதத்துவத்தைச் சாமான்னிய சைவ புராணிகர் கூறுகின்றனர் என்றும் அவ்வாறு கூறுகின்ற பிரசங்கத்தில் பிரமாணங்கள் காண்பிப்பது இல்லை என்றும் பிராமணத்தலைவர்கள்* சைவத்தை இகழ்ச்சி செய்கின்றார்கள் என்றும், அருவை கொள்கின்றார்கள் என்றும் அவர் அன்றி, ஆங்கிலம்வாசித்த மற்றையரும் உபேக்ஷை† செய்கின்றார்கள் என்றும் என்னபாவம் செய்பினும் கடவுளுக்கு அபிஷேக‡ முதலியன செய்யின் நீங்கிவிடும் என்று புராணிகர்கள் கூறுகின்றனர் என்றும், சைவப்பிரசங்கத்தை நல்ல பண்டிதர்களே பிரசங்கம் செய்தல் வேண்டுமென்றும் உபந்நியாசித்தனர். ஐந்தாவது. வெள்ளையூர் ஸ்ரீமான் சொக்கலிங்க உடையார் அவர்கள் "சைவ பாஷியர்க்கு ஓர் விண்ணப்பம்" எனும் பிரசங்கத்தை ஆரம்பித்துத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவா

---

*சைவத்தை இகழ்ச்சிசெய்பர்களும் அதில் அருவை கொள்ளுபவர்களுமாகிய பிராமணத்தலைவர்கள் மாயாவாதியர்களாயிருப்பர்.

†ஆங்கிலம் வாசித்தோர் சைவத்தை உபேட்சிப்பரெனின் அவர் சித்தாந்தநூலாராய்ச்சி செய்யாதவராவர்.

‡அபிஷேகம் செய்வதால் பாவம் போமென்பது சத்தியம் "யோநாபிஷேச்யதேசூலீ ஆதிநாகும்பசம்பவ, ஸஹிஸாயுஜ்யமாப்நோதி ஸிவஸ்யபரமேஷ்டிந:" என்ற சிவாகமமே பிரமாணமாம்.

மிகள் தம் பாலியத்திலேயே சைவ சமயத்திற்குப் பாடுபட்டதாலன்றோ சைவசமயம் விளங்கிற்று. இவ்வித மகாசமாஜம் சமயாசாரிய சுவாமிகள் இருந்த அக்காலத்து இருக்கின் இன்றும் எவ்வளவோ பெருமையோடு படர்ந்திருக்கும் ஆதலால் சைவ பாலியர்கள் ஒவ்வொருவரும் தம்தம் கடமையாகச் சைவத்திற்குப் பாடுபட்டுச் சமாஜத்தை வளர்த்தல் வேண்டும் என்றும் உபந்நியாசித்தனர். ஆறுவது. ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் "இரக்கம்" என்னும் விஷயத்தைப் பல பிரமாணங்களால் பிரசங்கித்ததுடன் நூல்கள் யாவும் வாசித்தால் பிறமதங்களைத் தூஷித்தல் வாராது என்று பிரசங்கித்தனர். ஏழாவது. வாலாஜாநகர் ஸ்ரீமான் ஆ. கமலநாத முதலியார் அவர்கள் "திருத்தொண்டர் மகிமை" எனும் விஷயத்தைப் பிரசங்கிக்க ஆரம்பித்து, தொண்டர்களே யாவரினும் பெரியர், ஸ்ரீ பஞ்சாட்சரமே எதனினும் பெரிது, குருலிங்க ஜங்கம பக்தியினால் தொண்டர் முத்தியடைந்தனர். நாம் அவர்வழிச் செல்வோம் என்று பிரசங்கித்தனர். எட்டாவது. மணிமங்கலம் ஸ்ரீமான் திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் "இன்பம்" என்னும் விஷயத்தை உபந்நியாசிக்க ஆரம்பித்து இன்பம் யாவற்றினும் சுனவயின்பம் ஒன்றே பெரியது என்றும் அறிவு ஒத்திருந்தால் அதுவே இன்பம் என்றும் இன்னும் பலபகர்ந்தனர். ஒன்பதாவது. ஸ்ரீமான் ஆனூர் சிங்கார வேலு முதலியார் அவர்கள் "தீக்ஷை" என்பதை விஷயமாகக் கொண்டு உலகத்துள் ஒவ்வொருமதத்தரும் தீக்ஷைசெய்து கொள்ளுகிறார்கள் என்றும், ஆனால் தீக்ஷை எவற்றினும் சைவ தீக்ஷையே சிறந்தது எனவும் பிரசங்கித்தனர். பத்தாவது. ஸ்ரீமான் எம். ஆர். குமாரசாமிப் பிள்ளை அவர்கள் "பதி புண்ணியம்" என்பதை விஷயமாகக் கொண்டு எல்லாப் புண்ணியங்களினும் பதி புண்ணியமே சிறந்தது எனவும், இப்பதி புண்ணியத்தைச் சிவபெருமானே தில்லையம்பதியின் கண் தீக்ஷிதர் மூவாயிரவரில் ஒருவரென இருந்து நிலை நாட்டினர் என்றும் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணம் செய்த காலத்திலேயே சைவ சித்தாந்த மகாசமாஜம் உலகமெங்கும் பரவியது என்றும் அம்மகா சமாஜத்தை உபசரித்த உபசரணைச்சங்கத்தலைவர் அனபாய சோழச் சக்ரவர்த்தி என்றும் பல உவமைகூறிப் பலர் மகிழ்வெய்தப் பேசினர். பதினோராவது. திருநள்ளாறு ஸ்ரீமான் நடேச தேசிகர் அவர்கள் "ஈஸ்வர உபாசனை" என்னும் விஷயத்தைப் பலசுருதிப் பிரமாணங்களோடு பலரும் மகிழ்வெய்தப் பேசினர். பன்னிரண்

டாவது. ஸ்ரீமான் கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் சைவ சித்தா
ந்த சாரம் எனும் விஷயத்தைப் பிரசிங்கிக்க ஆரம்பித்து, பதி, பசு,
பாசம் இவையென உணர்த்தி, துவிதமே அத்துவித ஞானத்தை உண்
டுபண்ணும் ஞான மாதலால் துவைத ஞானத்தை யடைந்தாலன்றி
முத்தியின்பத்தை யடைதல்கூடாது என்றும் ஆண்டான் அடிமைத்
திறம் கூறுவதே சைவ சித்தாந்தம் எனவும் அவன் அருளால் இவன்
அவன் ஆவதன்றி அவன் இவன் ஆவது இல்லை என்றும் சாத்திரமேற்
கோள்களுடன்பேசினர். பிறகு சபாநாயகசுவாமிகள் ஒவ்வொருவர் பிர
சங்கத்தின் சாரத்தை எடுத்துக்கூறித் தம் அபிப்பிராயங்களையும் பிர
சங்கித்து யாவரையும் மகிழச் செய்தனர். பின்னர் காரியதரிசி ஸ்ரீ
மான் கி. குப்புச்சாமி முதலியார் அவர்கள் நம்மையாளும் சக்ரவர்
த்தி முதலானயார்க்கும் நன்றி கூறினர். தேவாரபாராயணம் நடை
பெற்றது. உபசாரணைச் சங்கத்தவர் சபாநாயகசுவாமிகளுக்கும் ஏனைய
உபந்நியாசகர் முதலியவர்களுக்கும் மாலைசூட்டினர். கரகோஷத்துட
னும் மங்கள வாத்தியத்துடனும் மகா சமாஜக் கூட்டம் முடிவுபெற்
றது. சபாநாயக சுவாமிகளும் மற்றையரும் தத்தம் இருக்கைக்கு ஏகி
னர். உபசாரணைச் சங்கத்தவர் வந்திருந்த வர்களுக்குச் செய்த உப
சரிப்பை இவ்விதம் என்று எழுதுவதற்கில்லை. அவர்க்கு இச்சமாஜம்
எப்போதும் கடமைப்பட்டுள்ளது என்று கூறுவதே பொருந்தும்,
இதுவன்றியும் சமாஜத்திற்கு உழைக்க முன்வந்த வயித்தியர்க்கும்
இச்சமாஜம் கடமைப்பட்டுள்ளது. இச்சமாஜம் நீடூழி வாழ்வதாக
சுபம்.

இங்ஙனம்,

களந்தைகிழான்.

சிவமயம்,

திருச்சிற்றம்பலம்.

## சைவசித்தாந்த மகாசமாஜ நிர்வாக சபையார்.

---

போஷகர்கள்.

மாட்சிமைதங்கிய

இராமநாதபுரம் ராஜா அவர்கள்,

ஸ்ரீமான் S. R. M. M S T. செட்டியாரவர்கள்.

,, S. இரத்தினவேலு செட்டியாரவர்கள் சென்னை.

,, அ-தா-முத்துக்குமார செட்டியாரவர்கள் கூடலூர்.

,, P, தெய்வசிகாமணி செட்டியாரவர்கள் சென்னை.

சபைத்தலைவர்

திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

உபவக்கிராசனாதிபதிகள்.

ஸ்ரீமான் T. நல்லசிவன் பிள்ளையவர்கள் B. A. B L.
High Court Vakil சென்னை

,, J. M. நல்லசாமி பிள்ளை யவர்கள் B. A, B. L.
High Court Vakil மதுரை.

காரியதரிசி

,, சி. குப்புச்சாமி முதலியாரவர்கள் சென்னை.

பொக்கிஷதார்

,, W. T. கோவிந்தராஜ முதலியாரவர்கள் சென்னை.

பத்திராசிரியர்

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

,, பூவை-கலியாணசுந்தர முதலியாரவர்கள் சென்னை.

(மணவழகு.)

உள்ளூர் நிர்வாக சபையினர்.

,, S. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் B. A, L. T.

,, திரு-வி-கலியாணசுந்தர முதலியாரவர்கள்.

,, இ. ஆதிமூல முதலியாரவர்கள்.

,, மோ. கந்தசாமி முதலியாரவர்கள் B. A.

,, C. V. ஜம்புலிங்க முதலியாரவர்கள்.

ஸ்ரீமான், மணி-திருநாவுக்கரசு முதலியாரவர்கள்
" V. S. கங்காதர முதலியாரவர்கள்
" A. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் (Monthly Auditor)
" முத்திருளாண்டிப் பிள்ளையவர்கள் B. A.
" T. S. சோமசுந்தரம் பிள்ளையவர்கள்
" சிவசங்கர முதலியாரவர்கள்

## வெளியூர் நிர்வாக சபையினர்.

" R. S. சுப்பிரமண்யம் அவர்கள் மன்னார்
" T. சொக்கநாதன் அவர்கள் கொழும்பு
" V. P. காந்திமதிநாதம் பிள்ளையவர்கள் B. A. அம்பாசமுத்திரம்
" விருதை-சிவஞானயோகிகள் விருதுபட்டி
" பொ. முத்தையபிள்ளையவர்கள் தூத்துக்குடி
" M. வேலுசாமி தேவரவர்கள் இராமநாதபுரம்
" வி. அமுர்தலிங்கஞ் செட்டியாரவர்கள் பூவாளூர்
" மு. கதிரேசஞ் செட்டியாரவர்கள் மகிபாலன் பட்டி
" T. மெய்கண்டபிள்ளையவர்கள் கோலாம்பர்
" S. T. சாமிநாதபிள்ளையவர்கள் திரிசிரபுரம்
" M. R. குமாரசாமிபிள்ளையவர்கள் திருக்கோவலூர்
" C. T. பார்த்தசாரதி முதலியாரவர்கள் B. A, L. T. சித்தூர்
" C. ஏகாம்பரமுதலியாரவர்கள் செங்கற்பட்டு
" K. U. பொன்னுசாமி முதலியாரவர்கள் உத்திரன்மேரூர்
" P. C. முருகேச முதலியாரவர்கள் காஞ்சிபுரம்
" P. இராஜவேலு முதலியாரவர்கள் B. A. வேலூர்
" ஹர-சண்முக முதலியாரவர்கள் சேலம்
" E. R. அர்த்தநாரி ஆச்சாரியாரவர்கள் ஈரோட்
" அருணாசலமுதலியாரவர்கள் கீழ்வேளூர்
" T. வைத்தியலிங்கம் செட்டியாரவர்கள் கூடலூர்
" C. ஏகாம்பரமுதலியாரவர்கள் பெங்களூர்
" பங்காருபத்தரவர்கள் புதுவை
" சுவாமிநாத பிள்ளையவர்கள் பரமகுடி
" சுப்பராயமுதலியாரவர்கள் திருவாரூர்

## கணிதபரிசோதகர்.

" T. கிருஷ்ணசாமி முதலியாரவர்கள் சென்னை

வனிதையர்பக்ஷக்காரியதரிசி

ஸ்ரீமதி-ஆண்டாளம்மாளவர்கள் பெங்களூர்

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 1914ஆம் டிசம்பர் மீ வரவு செலவு கணக்கு.

| வரவு. | தோகை. ரூபா. | அ | ப | மொத்தத் தோகை. ரூபா. | அ | ப |
|---|---|---|---|---|---|---|
| 1914ஆம் டிசம்பர் மீ 1உ இருப்பு | | | | 604 | 5 | 7 |
| கூடலூர் உபசரணைகமிட்டியார் வரவு | 100* | 0 | 0 | | | |
| சமாசிகர் வருடச்சந்தா | 42 | 13 | 0 | | | |
| ஆயுள் சமாசிகர் சந்தா | 55 | 0 | 0 | | | |
| புத்தக சாலைக்காக வரவு | 26 | 0 | 0 | | | |
| நன்கொடை | 13 | 0 | 0 | | | |
| | 236 | 13 | 0 | | | |
| | | | | 841 | 2 | 7 |

* நவம்பர் மீ த்தில் ரூபா 50 வரவு நீங்கலாக.

| செலவு. | தோகை. ரூபா. | அ | ப |
|---|---|---|---|
| "சித்தாந்தம்," அறிக்கை முதலியவற்றிற்கு அச்சுக்கூலி காகிதம் உள்பட | 60 | 7 | 0 |
| காகிதம் எழுதுகோல் | 0 | 13 | 0 |
| தபால் செலவு | 23 | 11 | 9 |
| தந்தி செலவு | 0 | 6 | 6 |
| வண்டிச்சத்தம் | 3 | 0 | 9 |
| உபந்நியாசகர் முதலானவர்களுக்குப் பிரயாணச் செலவு | 51 | 8 | 0 |
| இதர செலவு | 1 | 9 | 0 |
| | 141 | 8 | 0 |
| கையிருப்பு | 699 | 10 | 7 |
| | 841 | 2 | 7 |

K. Kuppusawmy Mudaliar,
*Secretary.*

A. Somasundram Pilly,
*Auditor.*

W. T Govindaraja Mudaliar,
*Treasurer.*